# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075844

C

1. District : மாவட்டம் கடலூர் | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு 2021 | FIR No.: மு.த.அ. எண் 12/2021 | Date: நாள் 01.10.2021

2. (i) Act சட்டம்: Criminal Procedure Code, 1973 — Sections பிரிவுகள்: 102

   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by The Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 30.09.2021 15.30 hrs — Date to : நாள் வரை 30.09.2021 20.00 hrs

   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.2021 — Time : நேரம் 12.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III — Time : நேரம் 12.00 hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 80 கி.மீ. தென்மேற்கு

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி சார் பதிவாளர் அலுவலகம், பெண்ணாடம், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --------------
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ. அமுதா — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் உதவி ஆய்வுக்குழு அலுவலர் — (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   K.சண்முகம், உதவியாளர், சார் பதிவாளர், பெண்ணாடம் சார் பதிவு அலுவலகம், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

இன்று 01.10.2021 ஆம் தேதி காலை 12.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, அ.அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு, நாள் : 01.10.2021, அனுப்புநர், அ. அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – சார்

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 1/10/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 1/10/21
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01-10-2021 at 13.30 hrs.

Name: பெயர் அ. திருவேங்கடம்,
Rank: நிலை ........................ No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு, கடலூர்.

பதிவாளர் அலுவலகம், பெண்ணாடம், திட்டக்குடி, கடலூர் மாவட்டம் – திடீர் ஆய்வு சோதனை – உரிய சரியான முகாந்திரம் இன்றி கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் – திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றுதல் – ஒப்படைப்பு – நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) உதவி ஆய்வுக்குழு அலுவலரான அ.அமுதா ஆகிய நான் எனது அலுவலகத்தில் இருக்கும் போது எனக்கு கிடைத்த தகவலின் படி கடலூர் மாவட்டம், பெண்ணாடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எழுத்தர்கள் 30.09.2021 ஆம் தேதி பெண்ணாடம் சார்பதிவக சார் பதிவாளர் K.சண்முகம் என்பவரை சந்தித்து ஆவணங்கள் பதிவு செய்வதற்காகவும் மற்றும் இதர பதிவுகளுக்காகவும் லஞ்சமாக பணம் கொடுக்க போவதாக கிடைக்க பெற்ற ரகசிய தகவலை பெற்று, உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மதியம் சுமார் 01.00 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த ஆய்வாளர் S.திருவேங்கடம் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி பெண்ணாடம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 03.00 மணிக்கு மேல் சென்றால் அங்கு ஆவண எழுத்தர்கள் பெண்ணாடம் சார்பதிவகத்தில் பத்திர பதிவிற்கு கொடுக்க உள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், ஆய்வாளர் திருவேங்கடம் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மதியம் 01.15 மணிக்கு அரசு வாகனத்தில் புறப்பட்டு கிழக்கு மேற்காக செல்லும் பெண்ணாடம் – செந்துறை சாலையின் வடபுறமாக அமைந்துள்ள பெண்ணாடம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் பெண்ணாடம் சார்பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 03.15 மணிக்கு தெற்கு பார்த்து அமைந்து இருக்கும் பெண்ணாடம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். நானும், ஆய்வாளரும் மற்றும் இதர காவல் குழுவினரும் மெயின் ஹாலில் வலதுபுறமாக தெற்கு பார்த்து அமர்ந்திருந்த நபரிடம், அவர்தான் சார்பதிவாளர் என தெரிந்துகொண்டபின்னர், என்னையும், ஆய்வாளரையும் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அவரை பற்றி விசாரித்த போது

அ. [signature] 1/10/21

தனது பெயர் K.சண்முகம், வயது 51, த/பெ N.கண்ணன் என்றும் 11.12.2020 முதல் பெண்ணாடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும், கதவு எண்.58,பாண்டி ரோடு, சின்னகங்கணாங்குப்பம், கடலூர் தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை, சார்பதிவாளர் K.சண்முகம் என்பவரிடம் ஆய்வு செய்ய போகும் விவரத்தை தெரிவித்தேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அவரது முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். மேற்படி பெண்ணாடம் சார்பதிவாளர் அலுவலகமானது சுற்றுசுவற்றுடன் கூடிய அரசு கட்டிடமாகும். இதன் பிரதான வாயிற்படி தெற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் வராண்டா சுமார் 20 x 8 அடி நீள அகலமுள்ளது. அதன் கிழக்குபுறத்தில் சுமார் 10 x 8 அடி நீள சிறிய அறை இருந்தது. இவ்வறையில் மரடேபிள் ஒன்று போடப்பட்டிருந்தது. இவ்வறையில் கைப்பற்றக்கூடிய பொருளோ பணமோ இல்லை. வராண்டாவை அடுத்து சுமார் 20 x 15 அடி நீள அகலமுள்ள பிரதான ஹால் அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஹாலின் வடபுறம் சார் பதிவாளர் இருக்கையின் நாற்காலியின் முன் டிராயருடன் கூடிய டேபிள் போடப்பட்டுள்ளது. அதன் மேலே கணினி மானிட்டர், கீபோர்டு வைக்கப்பட்டுள்ளது. மேஜையின் டிராயரை சோதனை செய்ததில் கைப்பற்றக்கூடிய பொருளோ பணமோ இல்லை. அந்த இருக்கைக்கு கிழக்கு புறம் ஆறு அடி உயரம் கொண்ட இரும்பு பீரோ இருந்தது. அதனை சோதனை செய்ய அதில் அலுவலக பதிவேடுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. சார்பதிவாளர் இருக்கையின் மேற்குபுறத்தில் போடப்பட்டிருந்த மேஜையின் எதிரே போடப்பட்டிருந்த நாற்காலியில் தெற்குபார்த்து அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க தனது பெயர் K.பாரதிதாசன், வயது 28, த/பெ கலியபெருமாள் என்றும் இவ்அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், கதவு எண்.78,செல்வராஜ் நகர், விருத்தாசலம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். அவரது மேஜை டிராயரை சோதனை செய்ய கைப்பற்றக்கூடிய பொருளோ பணமோ இல்லை. இந்த பிரதான ஹாலின் மேற்குபுறத்தில் சுமார் 10 x 15 அடி நீல அகலம் கொண்ட கண்ணாடி கதவுகள் பொறுத்தப்பட்ட குளிர்சாதன வசதி கொண்ட சர்வர் ரூம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வறையில் ஐந்து கணிணிகள் மேஜை வசதிகளுடன் இருந்தது. மேலும் நான்கு பிரிண்டர் இருந்தன.

அ. [signature]
1/10/21

இவ்வறையில் கேமரா ஆப்பரேட்டராக பணியில் இருந்த S.முகம்மது அப்துல் காதர், வயது 30, த/பெ சையது இப்ராஹிம், 2, ஆவடி ரோடு, விருத்தாசலம், கடலூர் மாவட்டம் என்பவரிடம் விசாரிக்க Out sourcing அடிப்படையில் Zigma Technology கம்பெனியின் மூலம் ஊதியம் பெற்று பணிபுரிவதாக சொன்னார். மேலும் இவ்வறையில் இருந்த R.சரவணா, வயது 43, க/பெ ராமராஜ், கீழத்தெரு, அரங்கூர், திட்டக்குடி, கடலூர் மாவட்டம் என்பவர் சார் பதிவாளர் அலுவலகத்தில் Data entry operator ஆக பணிபுரிந்துவருவதாகவும், இவரை பற்றி விசாரிக்க இவர் Out sourcing அடிப்படையில் TCS கம்பெனியின் மூலம் ஊதியம் பெற்று பணிபுரிவதாக சொன்னார்கள். மேற்படி பிரதான ஹாலுக்கு வடக்குபுறத்தில் சுமார் 30 x 15 நீள அகலம் கொண்ட அறை உள்ளது. இவ்வறையில் மரத்திலான ஆறு பீரோக்களும், இரும்பிலான மூன்று பீரோக்களும் இருந்தன. அறையின் கிழக்குபுறத்தில் மேற்குபார்த்து போடப்பட்டிருந்த போது, இரும்பு பீரோவில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது, அதில் இரண்டாவது அடுக்கில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சோதனை செய்து பார்க்க ஆவணங்கள் அடியில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 500 x 40 = 20,000/- (2) 200 x 2 = 400/-, (3) 100 x 5 = 500/- (4) 50 x 5 = 250, (5) 20 x 3 = 60, ஆக மொத்தம் ரூ.21,210/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் சண்முகத்திடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். அதனை தொடர்ந்து இவ்வறையின் மேற்குபுறத்தில் கிழக்கு பார்த்து போடப்பட்டிருந்த மர பீரோவில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது, அதில் மூன்றாவது அடுக்கில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சோதனை செய்து பார்க்க ஆவணங்கள் அடியில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்து. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 2000 x 3 = 6,000/-, (2) 500 x 20 = 10,000/- (3) 100 x 7 = 700/-, (4) 50 x 4 = 200/- (5) 10 x 8 = 80 ஆக மொத்தம் ரூ.16,980/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் சண்முகத்திடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். இவ்வறையின் வடக்குபுறத்தில் சுமார் 30 x 15 அடி நீள அகலமுள்ள பதிவுரு வைப்பறை உள்ளது. இவ்வறையின் மேற்குபுறத்தில் மரத்திலான நான்கு அடுக்குகளை கொண்ட சுமார் 6 அடி உயரமும் 3 அடி அகலம் கொண்ட மரத்திலான இரண்டு ரேக்குகள் போடப்பட்டிருந்தன. அதில் ஆவணங்கள் அடுக்கி

அ. [signature] 1/10/21

வைக்கப்பட்டிருந்தது. அதனை சோதனை செய்ய மேல் அடுக்கில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு அடியில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 500 x 43 = 21,500/- (2) 200 x 5 = 1000/- ஆக மொத்தம் ரூ.22,500/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் சண்முகத்திடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். மேற்சொன்ன ஆய்வின்போது கணக்கில் வராத, சார்பதிவாளரால் உரிய முகாந்திரம் தெரிவிக்காததால் பணம் ரூ.60,690/– மட்டும் கைப்பற்றப்பட்டது. மேலும், 1) வருகை பதிவேடு 01.01.2021 முதல் 31.12.2021 (தாள் 1 முதல் 20 வரை), 2) தனி நபர் பண இருப்பு பதிவேடு 01.01.2021 முதல் 31.12.2021, பக்கம் 13–ல் 30.09.2021 ஆம் தேதி க.சண்முகம், சார் பதிவாளர், ரூ.550/–எனவும், க.பாரதிதாசன், இளநிலை உதவியாளர் ரூ.400 (தாள் 1 முதல் 20 வரை), 3) இயக்கப்பதிவேடு (01.01.2021 முதல் 31.12.2021 வரை) மொத்த பக்கங்கள் 21, அதில் தாள் 8–ல் 30.09.2021 ஆம் தேதி க.சண்முகம், சார் பதிவாளர் வெண்கரும்பூருக்கு 12.20 மணிக்கு புறப்பட்டு 1.05 மணிக்கு மீள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தவாறு குறிப்பு உள்ளது), 4) 30.09.2021 பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் (ஆவண எண்.2011/2021, 2012/2021, 2013/2021, 2014/2021, 2015/2021, 2016/2021, 2017/2021, 2018/2021) ஆகியவை பதிவேடுகள் மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை, எந்தெந்த ஆவணங்கள்/பொருட்கள் எவ்வாறு எங்கிருந்து எடுக்கப்பட்டதோ, அதே இடத்தில் மீண்டும் வைக்கப்பட்டது. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. மேலும் இச்சோதனையானது அரசு வகுத்துள்ள கொரானா தடுப்பு நடவடிக்கை வழிமுறைகளை முறையாக பின்பற்றி நடத்தப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மாலை 03.30 மணிக்கு துவங்கி இரவு 08.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

உத்திரவுப்படி இன்று 01.10.2021 ஆம் தேதி காலை 12.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து, 30.09.2021 ஆம் தேதி

அ. [signature] 1/10/21

பெண்ணாடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டி, திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர், ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.60,690/–, திடீர் ஆய்வு மகஜரில் குறிப்பிட்டுள்ள கைப்பற்றப்பட்ட ஆவணங்களை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக பதிவு செய்யும் வழக்கின் விவரம் பின்னர் தெரியப்படுத்துமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள, (கையொப்பம்), (அ.அமுதா). அய்யா, நான் இன்று 01.10.2021 காலை 12.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2021, சட்டபிரிவு 102 குற்றவியல் நடைமுறை சட்டம் மற்றும் சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988, ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதன் அசலை, வாதியின் புகார் மனுவுடன் இணைத்து, கணம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அ. [signature]

1/10/21

அ. திருவெங்கடம்,

காவல் ஆய்வாளர்,

ஊ.த.க பிரிவு

கடலூர்.